1978 மார்ச் 8]

மணிமுத்தாறு பாசனத் திட்டம்.

*வின—446 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத்திற்கு மேலும் ஒரு தனிக்கால் ஏற்படுத்தியதால் முக்கவர் பாசன விவசாயம் தீய்வு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தீய்வு ஏற்படுவதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத்திற்காக இதுவரை மேலும் ஒரு தனிக்கால் வெட்டப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்று விதமான கால்வாய்கள் போய்க் கொண்டு இருக்கின்றன. இப்போது நான்காவது கால்வாய் என்ற முறையில் தண்ணீர் திருப்பி விடப்படுகிறது. தவறான தகவலை மந்திரிக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மந்திரி அவர்கள் மீண்டும் சரியான தகவலை அறிந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தவறான தகவல் அல்ல. திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத்திற்கு மேலும் ஒரு தனிக்கால் வெட்டப்பட வில்லை என்று சொன்னேன். பெருங்கால் வாய்க்காலின் குளத்துப் பாசனமான குட்டிக்கரடி குளத்திற்கு நேரடிப் பாசனத்தின் மூலம் தண்ணீர் கொடுப்பதற்காக முக்கவரின் தள மட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருநெல்வேலி மற்றும் பெருங்கால் குளத்துப் பாசனத்தார்கள் ஆகியோரின் ஒப்புதலின் பேரில் 1 அடி உயர்த்தப்பட்டுள்ளது. இதனுல் முக்கவருக்குக் கீழுள்ள பாசனம் இதுவரை பாதிக்கப்படவில்லை.

[1978 மார்ச் 8

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அந்தக் குளத்திற்கு வேறு ஒரு கால்வாய் வழியாகத் தண்ணீர் போய்க் கொண்டிருந்தது. அணையிலே தண்ணீர் குறைந்து விட்ட காரணத்தாலே இப்போது இப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஏற்கனவே முக்கவர் பக்கத்தில் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைத்துக் கொண்டிருந்த நிலைமை மாறி இப்போது அங்கே பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது என்றும் பழைய முறையில் தண்ணீர் வேண்டுமென்றும் தெற்குப் பாப்பாங்குளம் பொது மக்கள் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னதைப் போன்று திருநெல்வேலி மற்றும் பெருங்கால் குளத்துப் பாசனத்தார்கள் ஆகியோரின் ஒப்புதலின் பேரில் 1 அடி உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்குள்ள பாசனம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பற்றிய தகவலை அரசு ஆராயும்.

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா.

*வினா 447 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளை அரசு சார்பில் கொண்டாட அரசு எண்ணியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாளை அரசு சார்பிலே கொண்டாட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக நான் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு புரட்சிக் கவிஞர் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் நாட்டிற்குப் புரட்சிகரமான கவிதைகளையும் எழுச்சி மிக்க கவிதைகளையும் எழுதித் தந்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் ஒருசேரக் கிடைக்காவிட்டாலும், அதற்காகப் பலர் முயற்சிகளை எடுத்தும், தனியார்களுக்கு அவைகள் எல்லாம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஆதிமுதல் இறுதி மூச்சு வரை எழுதியுள்ள கவிதைகளையெல்லாம் திரட்டி நமது மாநில அரசே அதை மலிவுப் புத்தகமாக வெளியிட்டு எல்லோருக்கும் அவை கிடைக்கும்படி ஏற்பாடுகளைச் செய்யுமா ?